## ★ ரூ.1,192 கோடி மதிப்பில் புதிய 400 கி.வோ. துணை மின் நிலையம் –11 புதிய 110 கி.வோ. துணை மின் நிலையங்கள்!

## ★ ரூ.215 கோடி மதிப்பில் – 18 புதிய 33 / 11 கி.வோ. துணை மின் நிலையங்கள் நிறுவ நடவடிக்கை!

# இந்த ஆண்டில் 50 ஆயிரம் புதிய விவசாய மின் இணைப்புகள் வழங்கப்படும்!

## சட்டப் பேரவையில் – எரிசக்தித் துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் – அமைச்சர் வி.செந்தில்பாலாஜி அறிவிப்பு!

**சென்னை,ஏப்.23–**

**ரூ.1,192 கோடி மதிப்பில் புதிய 400 கி.வோ. துணை மின் நிலையம் –11 புதிய 110 கி.வோ. துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் என்றும், ரூ.215 கோடி மதிப்பில் – 18 புதிய 33/11 கி.வோ. துணை மின் நிலையங்கள் நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இந்த ஆண்டில் 50 ஆயிரம் புதிய விவசாய மின் இணைப்புகள் வழங்கப்படும் என்றும் சட்டப் பேரவையில் – எரிசக்தித் துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் – அமைச்சர் வி.செந்தில்பாலாஜி அறிவித்துள்ளார்.**

**எரிசக்தித் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் மின்சாரத் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி ஆற்றிய பதிலுரை வருமாறு:**

தன்மானம் பழகு; அதுவே தமிழர்களுக்கு அழகு (மேசையைத் தட்டும் ஒலி) என சுயமாய் சிந்தித்து, சுயமரியாதையோடு வாழச் சொன்ன கருஞ்சட்டைக் கதிரவன் தந்தை பெரியார் (மேசையைத் தட்டும் ஒலி) கடைசி மூச்சு காற்றில் கரைந்து கடைக்கோடி தமிழனின் சுவாசப் பையை நிறைக்கும் வரை தவத்திரு தமிழ் நிலத்தின் தன்மான உணர்ச்சிக்கும் தடையற்ற வளர்ச்சிக்கும்

தமிழ் முன்னேற்றமே தன்னுடைய இலக்கு என தன்னையே எண்ணெய்யாக்கி திக்கெட்டும் ஒளிர்ந்த திராவிடத் திருவிளக்கு பெரும் நெருப்பு பேரறிஞர் அண்ணா (மேசையைத் தட்டும் ஒலி) செந்தமிழ் சூரியர் நற்றமிழ் நாயகர், வளர்ச்சிக்கு தமிழ்நாட்டை வளர்த்தெடுத்த வித்தகர், பச்சை மையை பேனாவில் ஊற்றி பைந்தமிழ்நாட்டை பசுமையாக்கிய ஓவியர், கரகரத்த தமிழ் கொண்டு கன்னித் தமிழையும், கணினித் தமிழையும் வளர்த்தெடுத்த காவியர், தென் திசையில் பற்றிய திராவிட நெருப்பு, நவீன தமிழ்நாட்டைச் செதுக்கியது இவர் உழைப்பு; தன்னை உரமாக்கி, தமிழ் மண்ணை வாழ வைத்த தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் ஆகிய முப்பெரும் தலைவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாநில உரிமைகள் மீட்கும் உங்கள் முத்தமிழ் முழக்கம் மாநிலத்தை அடகு வைப்போர் நெஞ்சினில் வெடிக்கும். திராவிடம் என்னும் தீராத் தீப்பெட்டியில் திட்டங்கள் எனும் தீக்குச்சிகளை எடுத்து தமிழ்நாட்டின் திசையெட்டிலும் வளர்ச்சி எனும் அகல் விளக்கை தினமும் ஏற்றிடும் திராவிட நாயகரே! இந்தியத் திருநாட்டின் இறையாண்மை

சத்து 20 ஆயிரம் விவசாயிகளுக்கு மின் இணைப்புகள் மட்டுமே வழங்கப்பட்டன. ஆனால், கடந்த 4 ஆண்டுகளில் 3,67,900 ஏக்கர் பாசனம் பெறும் வகையில் 1,82,000 விவசாயிகளுக்கு மின் இணைப்புகள் வழங்கி விவசாயிகளின் பாதுகாவலராக முதலமைச்சர் திகழ்ந்து வருகின்றார்கள். தமிழ்நாட்டினுடைய மொத்த மின் நுகர்வுகள் 3.44 கோடி ஆகும். 1-4-2021 அன்று தமிழ்நாட்டினுடைய மொத்த மின் நிறுவுதிறன் 32,595 MW என்பது தற்போது இந்த 4 ஆண்டுகளில் 39,770 MW ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. பொதுவாக இணைக்கப்பட்டுள்ள மின் பளு என்பது 2021-2025 ஆகிய நான்கு ஆண்டுகளில் 23,568 MW அளவிற்குக் கூடுதலாக மின் பளுக்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன.

அதேபோல, கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 2016-2021-ல் அதிகபட்ச உச்ச மின்தேவை என்பது 16,481 MW மட்டுமே. அதுவும் 5 ஆண்டுகளில் நான்கு நாட்கள் மட்டுமே இந்த 16,400 MW-க்கு மேல் தேவைப்பட்டன. ஆனால், திராவிட மாடல் ஆட்சியில் 4 ஆண்டுகளில் 142 நாட்களுக்குமேல் 16,400 MW-க்கு மேல் உச்ச மின் தேவை அதிகரித்து வரலாற்று சாதனை படைத்துள்ளன. குறிப்பாக, 16,500 MW-க்கு மேல் 20,830 MW வரை 4 ஆண்டுகளில் 330 நாட்கள் உச்ச மின் தேவை ஏற்பட்டு, இது மிகப்பெரிய வளர்ச்சிக்கு உதாரணமாக அமைந்திருக்கின்றன.

**அதிக பட்ச மின் நுகர்வு!**

தமிழ்நாட்டினுடைய அதிகபட்ச மின் நுகர்வு என்பது 2020-2021 ஆம் ஆண்டில் 16,481 MW என்பது 2024-2025 ஆம் ஆண்டில் 20,830 MW என்று உயர்ந்துள்ளது. குறிப்பாக, 2016-2017 ஆம் ஆண்டில் 15,343 MW, 2017-2018 ஆம் ஆண்டில் 15,240 MW, 2018-2019 ஆம் ஆண்டில் 15,847 MW, 2019-2020 ஆம் ஆண்டில் 16,151 MW, 2020-2021 ஆம் ஆண்டில் 16,481 MW என்ற நிலையில் இருந்த அதிகபட்ச மின் நுகர்வு என்பது 2020-2021 ஆம் ஆண்டில் 17,196 MW ஆகவும், 2022-2023 ஆம் ஆண்டில் 18,053 MW ஆகவும், 2023-2024 ஆம் ஆண்டில் 19,409 MW ஆகவும், 2024-2025 ஆம் ஆண்டில் 20,830 MW ஆகவும் உயர்ந்து உச்சத்தை அடைந்திருக்கின்றன.

ஒரு நாள் அதிகபட்ச மின் நுகர்வு என்பது 2016-2017 ஆம் ஆண்டில் 345 MU, அதுவே 2020-2021 ஆம் ஆண்டில் 362

## தமிழ்நாடு மின்சார வாரியத்தில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை!

காத்திடும் தென்திசை இமயமே! இந்தத் திருநாட்டில் எல்லோருக்கும் எல்லாம் கிடைத்தது, சமத்துவமும், சமூக நீதியும் தழைத்தோங்கி இருப்பது ஒரே ஓர் இடம். அது நான்கு ஆண்டுகளாக நாள்தோறும் நீங்கள் தந்த நலத்திட்டங்களால் தலைநிமிர்ந்து நிற்கும் நம் தமிழ்நாடு. எண்ணத்தில் தூய்மை, எப்போதும் எளிமை, உள்ளத்தில் வலிமை, வாக்கினில் வாய்மை, வாழ்வில் நேர்மை என உங்களிடம் கற்றுக்கொள்ள எங்களுக்கு நூறுண்டு, கற்றுத் தர உங்களைத் தவிர வேறு யாருண்டு. முதலமைச்சர் அவர்களை பணிந்து வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உழைக்கும் கழகத்தினரின் உள்ளத்துத் துணிவு பெரும் இளம் படையின் புடைத்திடும் நரம்பு! ஓய்ந்திடாத முரசொலி! சமத்துவ சுடரொளி! சனாதன வேரறுத்து சமத்துவம் வளர்த்திடும் புன்னகைப் பேரொளி! செந்தமிழ் நாட்டுக் காவலரின் செயல்மிகு புதல்வர்! ஆற்றல்மிகு கூட்டத்தின் அறிவுமிகு தலைவர்! இளையோரைக் கவர்ந்த இரும்பு இளைஞர்! இனிக்கும் பேச்சினில் இன்னொரு கலைஞர்! நிகழ்ந்த அதிசயம், நிகழும் அற்புதம், நாளைய சரித்திரம், இளந்தலைவர் துணை முதலமைச்சர் அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அவை முன்னவர் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டப்பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கம். என்னைத் தொடர்ந்து வெற்றிபெறச் செய்து மக்கள் பணியாற்ற வாய்ப்பு வழங்கிய கரூர் தொகுதி மக்களுக்கும், கரூர் மாவட்டத்தில் நான்கு தொகுதிகளிலும் உதய சூரியனை வெற்றி பெறச் செய்த கரூர் மாவட்ட மக்களுக்கும் என் வாழ்நாள் நன்றியைச் சமர்ப்பித்து வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**1,82,000 விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்புகள்!**

2021-2025 ஆகிய நான்கு ஆண்டுகளில் 27 இலட்சத்து 76 ஆயிரம் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

2011 முதல் 2021 வரையிலான கடந்த 10 ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சியில் 2 இலட்

MU. ஐந்து ஆண்டுகளில் உயர்ந்தது என்பது குறைந்தபட்சம் 17 MU மட்டுமே. ஆனால், 2021-2022 ஆம் ஆண்டில் 376 MU,

2022-2023 ஆம் ஆண்டில் 388 MU, 2023-2024 ஆம் ஆண்டில் 426 MU,


2024-2025 ஆம் ஆண்டில் 454 MU என திராவிட மாடல் ஆட்சியில் முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியால் 2021-2022-க்கும், 2024-2025-க்கும் உள்ள உயர்வு 79 MU என்று உயர்ந்து வரலாற்றுச் சாதனையை தமிழ்நாடு மின்சார வாரியம் படைத்துள்ளது.

அதேபோல, கடந்த 2016-2017 ஆம் ஆண்டில் சென்னையின் ஒரு நாள் அதிகபட்ச மின் நுகர்வு 59 மில்லியன் யூனிட் ஆகும். அதுவே, 2020-2021 ஆம் ஆண்டில் 66 மில்லியன் யூனிட் என 5 ஆண்டுகளின் உயர்வு வெறும் 7 மில்லியன் யூனிட் மட்டுமே. ஆனால், 2024-2025 ஆம் ஆண்டில் சென்னையில் ஒரு நாள் அதிகபட்ச மின் நுகர்வு 102 மில்லியன் யூனிட்டாக, அதாவது 4 ஆண்டுகளில் இந்த உயர்வு 36 மில்லியன் யூனிட் ஆக உயர்ந்திருக்கிறது.

மின்சாரப் பயன்பாட்டைப் பொறுத்தவரை, 2016-2021-ல் 5 ஆண்டுகளில், அதிகபட்சமாக ஓராண்டில் தமிழ்நாட்டின் மொத்த மின் நுகர்வு 2019-2020 ஆம் ஆண்டில் 94,947 மில்லியன் யூனிட் ஆகும். வளர்ச்சி என்பதையே இலக்காகக் கொண்டு செயல்படும் திராவிட முதல்வரின் நல்லாட்சியில் 2021-2022 ஆம் ஆண்டில் 98,674 மில்லியன் யூனிட் ஆகவும், 2022-2023 ஆம் ஆண்டில் 1,03,546 மில்லியன் யூனிட் ஆகவும், 2023-2024 ஆம் ஆண்டில் 1,11,504 மில்லியன் யூனிட் ஆகவும், 2024-2025 ஆம் ஆண்டில் 1,16,813 மில்லியன் யூனிட் என்ற அளவிலும் உயர்ந்து, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் வரலாற்றில் 4 ஆண்டுகளில் அதிகரித்த மின் தேவை இதுவே அதிகபட்சம் என்ற வரலாற்றுச் சாதனையை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது.

**ஆண்டுதோறும் தொடர்ந்து வளர்ச்சி!**

குறிப்பாக, LT தொழிற்சாலையைப் பொறுத்தவரை, ஓராண்டு சராசரி மின்சாரப்



பயன்பாடு 2019-2020 ஆம் ஆண்டில் 7,315 மில்லியன் யூனிட் ஆகும். 2021-2022 ஆம் ஆண்டில் 7,651 மில்லியன் யூனிட் ஆகவும், 2024-2025 ஆம் ஆண்டில் 8,405 மில்லியன் யூனிட் என்ற அளவிலும் தொடர்ந்து ஆண்டுதோறும் அதிகரித்துக்கொண்டே வருகிறது.

அதேபோல, HT தொழிற்சாலையைப் பொறுத்தவரை, ஓராண்டில் மின்சாரப் பயன்பாடு 2016-2017 ஆம் ஆண்டில் 23,160 மில்லியன் யூனிட் ஆகும். அதுவே, 2019-2020 ஆம் ஆண்டில் 26,255 மில்லியன் யூனிட்டாக உயர்ந்த நிலையில், தொழில் வளர்ச்சி, வேலைவாய்ப்பு என்னும் வளர்ச்சிப் பாதையில் தமிழ்நாட்டை வழிநடத்தும் முதலமைச்சர் அவர்களின் மக்களாட்சியில், 2021-2022 ஆம் ஆண்டில் 27,964 மில்லியன் யூனிட் ஆகவும், 2022-2023 ஆம் ஆண்டில் 30,122 மில்லியன் யூனிட் ஆகவும், 2023-2024 ஆம் ஆண்டில் 32,435 மில்லியன் யூனிட் ஆகவும், 2024-2025 ஆம் ஆண்டில் 34,540 மில்லியன் யூனிட் என்ற அளவிலும் தொடர்ந்து ஆண்டுதோறும் வளர்ச்சியை நோக்கி தமிழ்நாடும், தமிழ்நாடு மின்சார வாரியமும் சென்று கொண்டிருக்கின்றன.

அதிகரித்துவரக்கூடிய மின் தேவையைக் கருத்தில்கொண்டு, முதலமைச்சர் மின் உற்பத்தித் திட்டங்களை விரைந்து முடிக்க வேண்டுமென்று உத்தரவுகளை வழங்கியுள்ளார்கள். வட சென்னை அனல் மின் நிலையத்தினுடைய Stage-III 800 மெகா வாட் முதலமைச்சர் அவர்களால் 7-3-2024 அன்று திறந்து வைக்கப்பட்டு, மின் உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது. இதுநாள் வரை, 1,283 மில்லியன் யூனிட் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. அதேபோல், உடன்குடி, 2x660 மெகா வாட் அனல் மின் நிலையத்தின் பணிகளை விரைந்து முடிக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, 91 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. அலகு-I, 660 மெகா வாட் இந்த ஆண்டு ஜூலை மாதத்திலும், அலகு-II அக்டோபர் மாதத்திலும் செயல்பாட்டிற்குக் கொண்டுவர முதலமைச்சர் உத்தரவுகளை வழங்கியிருக்கின்றார்கள். துறையும் விரைவாக நடவடிக்கை எடுத்து வருகிறது.

**மின் உற்பத்தி!**

எண்ணூர் சிறப்புப் பொருளாதார மண்டல மிக உய்ய அனல் மின் திட்டம் 2x660 மெகா வாட் 62 சதவிகித பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் மார்ச் 2026-ல் செயல்பாட்டுக்குக் கொண்டுவரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. உப்பூர் மிக உய்ய அனல் மின் திட்டம், அதேபோல எண்ணூர் மிக உய்ய அனல் மின் நிலைய விரிவாக்கத் திட்டம் என மொத்தம் 5 திட்டங்களின்மூலம் 5,700 மெகா வாட் அனல் மின் திட்டங்கள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு, 800 மெகா வாட் திட்டம் முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 4,900 மெகா வாட் அனல் மின் திட்டங்களை விரைவாக முடிக்க முதலமைச்சர் உத்தரவுகளை வழங்கியிருக்கின்றார்கள்.

தமிழ்நாடு மின் வாரியத்திற்குச் சொந்தமான அனல் மின் நிலையங்களின்மூலம் உற்பத்தி செய்யப்பட்ட 15,554 மில்லியன் யூனிட் மின்சாரம் 2021-2022 ஆம் ஆண்டில் 20,391 மில்லியன் யூனிட்டாக அதிகரித்தது. இது 31 சதவிகித கூடுதல் உற்பத்தியாகும். 2022-2023 ஆம் ஆண்டில் 22,689 மில்லியன் யூனிட் என்ற அளவிலும், 2023-2024 ஆம் ஆண்டில் 25,479 மில்லியன் யூனிட் என்ற அளவிலும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

**ரூ.869.89 கோடியில் பணிகள்!**

அனல் மின் நிலையங்களின் திறனை மேம்படுத்துவதற்காக தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் ரூ.18.19 கோடி மதிப்பீட்டிலும், வட சென்னை-I அனல் மின் நிலையத்தில் ரூ.557.81 கோடி மதிப்பீட்டிலும், வட சென்னை-II அனல் மின் நிலையத்தில் ரூ.126.87 கோடி மதிப்பீட்டிலும், மேட்டூர்-I அனல் மின் நிலையத்தில் ரூ.106.51 கோடி மதிப்பீட்டிலும், மேட்டூர்-II அனல் மின் நிலையத்தில் ரூ.60.42 கோடி மதிப்பீட்டிலும் என ஒட்டுமொத்தமாக ரூ.869.80 கோடி மதிப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

சூரிய சக்தியைப் பயன்படுத்துவதில் தமிழ்நாடு குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை அடைந்துள்ளது. ஒட்டுமொத்தமாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறனில் இந்திய அளவில் மூன்றாவது இடத்தில் உள்ளோம். 2021-2022 ஆம் ஆண்டிலிருந்து 5,998 மெகா வாட் சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையங்கள் தமிழ்நாடு மின் கட்டமைப்பில் இணைக்கப்பட்டுள்ளன. மார்ச் 2025 அன்றுள்ளவாறு, 10,510 மெகா வாட் நிறுவுதிறனுடன் தமிழ்நாடு இந்தியாவில் நான்காவது இடத்தில் உள்ளது. சூரிய சக்தியின்மூலம் உச்ச உற்பத்தித் திறன் 16-2-2025 அன்று அதிகபட்சமாக 6,579 மெகா வாட் உற்பத்தி என்று பதிவாகி சாதனை படைத்துள்ளது. சூரிய சக்தி மின் உற்பத்தி 16-9-2024 அன்று 48.20 மில்லியன் யூனிட் என்ற அளவில் சூரிய மின் உற்பத்தி செய்யப்பட்டதில் இதுவே உச்சமாகும். எனவே, சூரிய மின் உற்பத்தி திட்டங்களில் முதலமைச்சர் தனி கவனம் செலுத்தி, அதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

சூரிய மேற்கூரை அமைப்பதன்மூலமாக சூரிய மின் உற்பத்தி 2020-2021 ஆம் ஆண்டு 24.08 மெகா வாட் நிறுவுதிறன் என்பது, 2021-2022-ல் 54.93 மெகா வாட், 2022-2023-ல் 101.54 மெகா வாட், 2023-2024-ல் 201.87 மெகா வாட், 2024-2025-ல் 404.18 மெகா வாட் ஆக உயர்ந்து வரலாற்றுச் சாதனையைப் படைத்திருக்கின்றது. 2021-2022 ஆம் ஆண்டில் கூரைமேல் நிறுவப்பட்ட சூரிய மின் உற்பத்தித் திறனுக்காக புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்திலிருந்து MNRE-Ministry of New and Renewable Energy-யிலிருந்து பெறப்பட்ட ஊக்கத்தொகை ரூ.7.9 கோடியாகும்.

**காற்றாலை மின் உற்பத்தி!**

காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் இரண்டாவது இடத்தில் இருக்கின்ற நாம், காற்றாலை மின் உற்பத்தி நிறுவுதிறனில் 9,331 மெகா வாட் என்ற அளவில் இருந்து

30-7-2024 அன்று காற்றாலைமூலம் பெறப்பட்ட மின்சாரம் 5,899 மெகா வாட்; 9-7-2024 காற்றாலைமூலம் கிடைக்கப்பெற்ற அதிகபட்ச மின் உற்பத்தி 120 மில்லியன் யூனிட். தமிழ்நாடு காற்றாலை மின் திட்டங்களுக்கு மறுசீரமைப்பு புதுப்பித்தல் மற்றும் ஆயுள் நீட்டிப்புக் கொள்கை 2024 வெளியிடப்பட்டன. காற்றாலை உற்பத்தியாளர்கள் பழையக் காற்றாலைகளை மீண்டும் இயக்குவதை ஊக்குவிப்பதற்காக battery சேமிப்புக்கலத்துடன்கூடிய காற்றாலை சூரிய கலப்பின உற்பத்தி நிறுவுவதற்கான தேர்வுடன் தமிழக அரசால் வெளியிடப்பட்டன. தமிழ்நாட்டில் தனியாருக்குச் சொந்தமான பழையத் திறனற்ற 27.67 மெகா வாட் காற்றாலைகள் மீண்டும் வலுபடுத்தப்பட்டுள்ளன.

கடல் காற்றாலைகள். கன்னியாகுமரி முதல் நாகப்பட்டினம் வரை காற்று வளம் 35

## தேரோடும் வீதிகளில் மேல்நிலை மின் பாதைகள் புதைவடங்களாக மாற்றப்படும்!

gigawatt உள்ளது என்று தேசியக் காற்றுச் சக்தி நிறுவனம் மதிப்பிட்டுள்ளது. மாநில மின் பரிமாற்ற (STU) மூலம் 1 யூனிட்டுக்கு ரூ.4 என்ற விகிதத்தில் 2,000 மெகா வாட் கடல் காற்று மின்சாரம் வாங்க தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் ஒப்புதல் வழங்கியிருக்கின்றது.

**மற்றொரு மைல்கல்!**

அதேபோல, புனல் மின் நிலையங்களைப் பொறுத்தவரையில், 47 புனல் மின் நிலையங்களில் 2,323 மெகா வாட் நிறுவுதிறன்மூலம் 2021-2025 மார்ச் வரை 20,224 மில்லியன் யூனிட் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றது. மோயாறு புனல் மின் நிலையத்தினுடைய உற்பத்தி அலகு I-ஐ 12 மெகா வாட்டிலிருந்து 14 மெகா வாட்டாக உயர்த்தி, 11-12-2024 முதல் கூடுதலாக மின் கட்டமைப்புடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் புனல் மின் நிலையங்களுடைய மின் உற்பத்தி 2021-2025 வரை 4 ஆண்டுகளில் மத்திய மின் ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 15,499 மில்லியன் யூனிட். ஆனால், 20,224 மில்லியன் யூனிட் மின் உற்பத்தி செய்து சாதனையைப் படைத்திருக்கின்றது. கடந்த 10 ஆண்டுகளில் 2022-2023-ல் அதிகபட்சமாக 6,174 மில்லியன் யூனிட் மின் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றது. கொல்லிமலை புனல் மின் திட்டம் 80 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. குந்தா நீரேற்று புனல் மின் திட்டம் 77 சதவிகிதம் முடிக்கப்பட்டிருக்கின்றன.

2 திட்டங்களும் 2025-2026 ஆம் ஆண்டு முடிக்கத் திட்டமிடப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளன. மிகக் குறைந்த செலவில் மின் உற்பத்தி செய்வதில் புனல் மின் திட்டங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. முதலமைச்சர் புனல் மின் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளித்து வருகின்றார்கள். அந்த வகையில், 14,500 மெகா வாட் திறன் கொண்ட 15 திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டங்கள் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மற்றுமொரு மைல்கல்லாகும்.

இணை உற்பத்தி மின் நிலையங்களைப் பொறுத்தவரை, மாநிலத்திலுள்ள 10 கூட்டுறவு, 2 பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் இணை மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவத் திட்டமிடப்பட்டு, மொத்தம் 183 மெகா வாட் மின் உற்பத்தி திறனை அடைவதை நோக்கமாக கொண்டு, தற்பொழுதுவரை 108 மெகா வாட் திறன் கொண்ட 7 இணை மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. 12 மெகா வாட் தருமபுரி, 15 மெகா வாட் M.R. கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலை 2 மின் திட்டங்களும், திட்ட இயக்கப் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டிருக்கின்றன. மீதமுள்ள 5 ஆலைகளில் பிப்ரவரி 2026-க்குள் உற்பத்தியைத் தொடங்க திட்டமிடப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக பசுமை எரிசக்தியை மேம்படுத்தக்கூடிய வகையில் அதனுடைய தேவைகளை உணர்ந்து முதலமைச்சர் , மின்கலன் ஆற்றல் சேமிப்பு என்ற ஒரு புதிய பரிணாமத்தை உருவாக்கி, இந்த மின்கலன் ஆற்றல் சேமிப்பின் மூலமாக 1,000 மெகா வாட் மின்சாரத்தை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. மேலும், கூடுதலாக 4,000 மெகா வாட் திறன் கொண்ட மின்கலன் சேமிப்புத் திட்டத்தை நிறுவுவதற்கு மின்சார வாரியம் திட்டமிட்டிருக்கின்றது. பொதுவாக, எரிசக்திக் கலனில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியினுடைய பங்கை அதிகரிக்கும் வகையில் புதுப்பிக்கத்தக்க ஆதாரங்களிலிருந்து விநியோக நிறுவனங்கள் 2025-2026 ஆம் நிதியாண்டில் இந்திய அரசினுடைய மின் அமைச்சகம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கொள்முதல் இலக்கை RPO 33 ஆக நிர்ணயித்திருக்கின்றது. 2030 ஆம் ஆண்டுக்குள் 43 இலக்கு நிர்ணயித்துள்ள இந்த நிலையில் தமிழ்நாடு மின் தேவையில் 50 விழுக்காடு தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய சொந்த உற்பத்தியாக இருக்க வேண்டும். மொத்த மின் தேவையில் 50 விழுக்காடு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கொள்முதலாக இருக்க வேண்டுமென்று முதலமைச்சர் திட்டங்களை முன்னெடுத்திருக்கின்றார்கள்.

**393 துணை மின் நிலையங்கள்!**

பொதுவாக ஒரு பக்கம் உற்பத்தி அதிகரிக்கின்றபொழுது, அதற்கான மின் கட்டமைப்பை வலுப்படுத்தி விநியோகத்திற்கான திட்டங்களை செயல்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் சீரான மின்சாரத்தை நாம் விநியோகம் செய்ய முடியுமென்ற சீரிய முயற்சியில் முதலமைச்சர் தொடர்ந்து அதைக் கண்காணித்து ஆய்வுக் கூட்டங்களில் அதற்கான நடவடிக்கைகளை எடுத்து, ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய வரலாற்றில் 4 ஆண்டுகளில் 393 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே 116 துணை மின் நிலையங்களுடைய பணிகள் முடிக்கப்பட்டு, மீதம் இருக்கக்கூடிய 64 துணை மின் நிலையங்களுடைய பணிகள் இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மீதம் இருக்கக்கூடிய பணிகளையும் இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். அதிலும் குறிப்பாக எந்தெந்த பகுதிகளில் அவசர, அவசியம் என்பதை முன்னுரிமைக் கொடுத்து அந்தப் பணிகளை எடுக்க வேண்டுமென்று முதலமைச்சர் உத்தரவுகளை வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். அதற்கான பணியினையும் துறை இப்போது முன்னெடுத்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறே ன்.

**74,815 மின்மாற்றிகள்!**

இந்த நான்கு ஆண்டுகளில் 74,815 மின் மாற்றிகள் கூடுதலாக நிறுவப்பட்டிருக்கின்றன. எந்தெந்த இடங்களிளெல்லாம் அதிக மின்னழுத்தம் இருக்கிறது; எந்தெந்த இடங்களில் குறைந்த மின்னழுத்தம் இருக்கிறது; எந்தெந்த இடங்களில் அதிக மின் பளு இருக்கிறது உள்ளிட்டவற்றையெல்லாம் கணக்கீடு செய்து, புதிததாக எந்தெந்த இடங்களில் மின் மாற்றிகள் அமைக்கப்பட வேண்டும் என்பதைக் கண்டறிந்து, இந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 74,815 மின் மாற்றிகள் நிறுவப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக LT line-ஐ பொறுத்தவரையில், இந்த நான்கு ஆண்டுகளில் 45,367 கிலோ மீட்டர் அளவிற்கும், HT line-ஐ பொறுத்தவரையில், 23,069 கிலோ மீட்டர் அளவிற்கும், EHTline-ஐ பொறுத்தவரையில், 3,655 கிலோ மீட்டர் அளவிற்கும் புதிதாக நிறுவப்பட்டிருக்கின்றன. மின் மாற்றிகள் பளு கூடுதல்/விரிவாக்கம் 20,380 MVA கடந்த நான்கு ஆண்டுகளில் கூடுதலாக நிறுவப்பட்டிருக்கின்றன.

அதேபோன்று, இந்த உட்கட்டமைப்புடன் சேர்த்து, இன்னும் கூடுதலான பணிகள் எந்தெந்த பகுதிகளில் மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்து ஒவ்வொரு மாதமும் துறையினுடைய அதிகாரிகள் ஆய்வுக் கூட்டங்கள் நடைபெறுகின்றன. களத்திற்குச் சென்று, ஆய்வுகளை மேற்கொண்டு, எங்கெங்கெல்லாம் பொது மக்களுக்கு பிரச்சினைகள் இருக்கிறதோ அவற்றை பொது மக்கள் எடுத்துச் சொல்வதற்கு முன்பாக தீர்க்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டதன் அடிப்படையிலும், கூடுதலாக புதிய பணிகளும் எடுத்துக் கொள்ளப்பட்டு, அந்தப் பணிகளையும் இந்த ஆண்டு மின்சார வாரியத்தின் மூலமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றன.

**புதைவடங்களாக மாற்றும் பணி!**

அதேபோன்று, மேல்நிலை மின் கம்பி பாதைகளை புதைவடங்களாக மாற்றக்கூடிய பணிகளைப் பொறுத்தவரையில், சென்னை மாநகராட்சியுடன் கூடுதலாக சேர்க்கப்பட்ட பகுதிகளிலும் அந்தப் பணிகளை விரைவாக முடிக்க வேண்டும் என்று முதலமைச்சர் துறைக்கு உத்தரவுகளை வழங்கியிருக்கின்றார்கள். அந்த வகையில், சென்னையைப் பொறுத்தவரையில், 2021 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஏறத்தாழ 5,801 மின் பெட்டிகள் தான் அமைக்கப்பட்டிருந்தன; 495 கிலோ மீட்டர்தான் புதைவடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. தமிழக முதல்வர் 2021 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு திராவிட மாடல் ஆட்சியில், இந்த நான்கு ஆண்டுகளில் சென்னையில் மட்டும் குறிப்பாக 32,357 மின்பெட்டிகள் நிறுவப்பட்டு, பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன; 2,774 கிலோ மீட்டர் புதிதாக மேல்நிலை மின் கம்பி பாதைகள் புதைவடங்களாக மாற்றியமைத்து பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. ஐந்து கோட்டங்களில், இரண்டு கோட்டங்களில் பணிகள் நிறைவு பெற்றிருக்கின்றன. மூன்று கோட்டங்களில் தற்போது விரைவாக பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. விரைவாக அந்தப் பணிகளை முடிக்க வேண்டும் என்று முதலமைச்சர் உத்தரவுகளை வழங்கியிருக்கின்றார்கள்.

**33.74 இலட்சம் புகார்களுக்கு தீர்வு!**

அதேபோன்று, ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு முழுவதும் மின் நுகர்வோர்கள் மின்சாரத் துறைக்கு ஒரு புகாரைத் தெரிவிக்க வேண்டுமென்றால், சம்பந்தப்பட்ட பிரிவு அலுவலகங்களையோ அல்லது உயர் அதிகாரிகளுடைய எண்ணிற்குத் தொடர்பு கொண்டு, தெரிவிக்கக்கூடிய நிலையை மாற்றி, தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய ஒட்டுமொத்த மின் நுகர்வோர்களும் ஒரே செல்போன் எண்ணில் தங்களுடைய புகார்களைப் பதிவு செய்தால் துறை நடவடிக்கை எடுக்கும் என்ற ஒரு மகத்தான மின்னகம், மின் நுகர்வோர் சேவை மையம் என்ற ஒரு சிறப்பு வாய்ந்த திட்டத்தை முதலமைச்சர் தங்களுடைய திருக்கரங்களால் 2021 ஆம் ஆண்டு தொடங்கி வைத்தார்கள். இந்த நான்கு ஆண்டுகளில் 33,80,807 புகார்கள் மின்னகம் மூலமாகப் பெறப்பட்டு, 33,74,801 புகார்களுக்குத் தீர்வு காணப்பட்டு, ஏறத்தாழ 99.82 சதவிகித புகார்களுக்கு உடனடியாக தீர்வுகள் காணப்பட்டிருக்கின்றன. இந்த மின்னகத்தைப் பொறுத்தவரையில், முதலமைச்சர் அவர்களுடைய ஒரு சிறப்புத் திட்டமாக, பொது மக்களுக்கும், மின் வாரிய அதிகாரிகளுக்கும், மின் வாரியத்திற்கும் ஓர் இணைப்புப் பாலமாக அமைந்திருக்கிறது. தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மக்கள் மின் துறை சார்ந்து, மீட்டர் சம்பந்தமாகவும் இந்த மின்னகத்தில் புகார் தெரிவித்தால்கூட, உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அந்தப் பணியை செய்து கொடுப்பார்கள். குறிப்பாக, மின்னகத்தினுடைய தலைமை அலுவலகத்தில் ஒரு shift-க்கு 65 பேர் என மொத்தம் மூன்று shifts-ல் பணியாற்றுகிறார்கள். இது மட்டுமல்லாமல், அந்தந்த மாவட்டங்களில் இருக்கக்கூடிய circle அலுவலகத்திலும் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, புகார்கள் பெறப்பட்டு, பணிகள் முடிந்த பிறகு சம்பந்தப்பட்ட circle-ல் இருக்கக்கூடிய அலுவலர்கள், புகார் அளித்தவரை தொடர்பு கொண்டு, இந்தப் புகார் நிறைவு பெற்றதா? உங்களுக்கு திருப்தியா? என்று கேட்ட பிறகுதான் இந்தப் புகார்கள் முழுமை பெறுகிறது; அப்போதுதான் புகார் முடித்துவைக்கப்படுகிறது. எனவே,

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்